**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 29.10.2025**
**OS. No. 156/2020**
**வழக்கு சாட்சி PW.1–கார்த்திகேயன் , த/பெ.பழனிசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) நான் தற்போது எங்கு குடியுள்ளேன் என்றால் ஓசூரில் குடியுள்ளேன். சுமார் 15 வருடங்களாக அங்கு தான் உள்ளேன். 1 முதல் 6 பிரதிவாதிகள் பாகபிரிவினை செய்த போது எங்களுடைய சொத்தையும் சேர்த்து பாகம் பிரித்ததால் அதை ரத்து செய்யக்கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இந்த வழக்கில் தாவா சொத்துக்களாக A, B செட்யூல் சொத்துக்களை காண்பித்துள்ளோம். A செட்டியூல் சொத்தாக ச.எண்.323/1, 323/2, 323/3 ஆகிய சொத்துக்களை காண்பித்துள்ளோம். அதன் விஸ்தீரணம் மற்றும் சக்குபந்திகள் எனக்கு நினைவில்லை. B செட்டியூல் சொத்தாக எந்த சர்வே எண்ணை காண்பித்துள்ளோம் என்றால் எனக்கு நினைவில்லை. அதன் விஸ்தீரணம் மற்றும் சக்குபந்திகள் தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை.

2) நான் என் சகோதரரான 2ம் வாதி ராஜேஸ்குமாருக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் எங்கள் மூதாதையர் திப்பிரெட்டி அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி திப்பிரெட்டிக்கு நான்கு மனைவிகள் என்றால் சரிதான். அவருக்கு நான்கு மகன்கள் மற்றம் ஒரு மகள் என்றால் சரிதான். அவர்களின் பெயர்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். திப்பிரெட்டியின் மனைவிகள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது, அவர்களின் பிள்ளைகளின் பெயர்கள் பெருமாள் ரெட்டியார், சென்ரெட்டியார், சின்ன சென்ராயர் ரெட்டியார், கெங்கிரெட்டியார் ஆகும், மகள் பெயர் தெரியவில்லை. பெருமாள் ரெட்டியார், சென்ரெட்டியார், கெங்கிரெட்டியார் ஆகியோர்கள் திப்பிரெட்டியின் 2வது மனைவிக்கு பிறந்த பிள்ளைகள் ஆவார்கள், சின்னசென்ராயர் ரெட்டியார் அவரது 4வது மனைவிக்கு பிறந்த மகன் ஆவார்.

3) தாவா சொத்துக்கள் எனக்கும், 2ம் வாதிக்கும் பாத்தியப்பட்டது என நான் பிராதில் சொல்லியதற்கு என் பாட்டி அக்கம்மாள் எங்கள் தந்தை பழனிசாமிக்கு 2011ல் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதன் பிறகு எனக்கும், என் தம்பிக்கும் அதே வருடம் பாக பிரிவினை ஏற்பட்டது, அந்த பத்திரமும் தாக்கல் செய்துள்ளேன். 2004ல் 1 முதல் 6 பிரதிவாதிகள் பாகபிரிவினை ஏற்படுத்திக்கொண்டு அதை பதிவு செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் உள்ள அனைத்து நபர்களையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் சுரேஷ் என்பவரை சேர்க்கவில்லை, அவர் இறந்துவிட்டார். அவர் எந்த வருடம் இறந்தார் என்றால் சுமார் 10 வருடங்கள் இருக்கும். அவருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்றால் ஆகிவிட்டது. அவருக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் உள்ளது. அவரது வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.